KARPAGAM ACADEMY OF HIGHER EDUCATION
Enable | Enlighten | Enrich
(Deemed to be University)
(Under Section 3 of UGC Act 1956)

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

(கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
கோயம்புத்தூர் - 641 021.

# தமிழில் பிற துறைகள்
# பன்னாட்டுக் கருத்தரங்கம்

21 நவம்பர் 2015, சனிக்கிழமை

தமிழ்த்துறை

## நூல் பற்றிய விவரங்கள்

### தமிழில் பிற துறைகள்

| | |
|---|---|
| பொருள் | : தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் |
| மொழி | : தமிழ் / ஆங்கிலம் |
| நூல்அளவு | : டெமி 1/4, புள்ளி 11 |
| படிகள் | : 150 |
| பக்கங்கள் | : 400 |
| முதற்பதிப்பு | : நவம்பர் 2015 |
| விலை | : 400/- |
| அச்சு | : ஏசியன் அச்சகம், சுந்தராபுரம், கோவை. |
| வெளியீடு/ உரிமை | : தமிழ்த்துறை<br>கற்பகம் உயர்க்கல்விக் கலைக்கழகம்<br>கோவை – 21 |
| ஐ.எஸ்.பி.என். எண் | : 978 - 81 – 928302 – 3 – 0 |

## BIBLIOGRAPHICAL DATA

### TAMIZHIL PIRA THURAIGAL

| | |
|---|---|
| Subject | : Tamil Research Articles |
| Language | : Tamil |
| Book size | : 1/8 |
| Pages | : 400 |
| First edition | : November,2015 |
| Price | : 400/- |
| Printing | : Asian achagam<br>Sundrapuram,covai. |
| Publication/Rights | : Dept of tamil,<br>Karpagam Academy of Higher Education,<br>Coimbatore-641021. |
| ISBN Number | : h978-81-928302-3-0 |

| | | |
|---|---|---|
| 98. | புறநானூற்றில் அறச்சிந்தனைகள் - முனைவர் க.பாஸ்கர் | 284 |
| 99. | பழந்தமிழ் இலக்கியங்களில் புனைவுகள் - ம.குமரன் | 286 |
| 100. | சங்க இலக்கியத்தில் வழிபாடுகள் - பா.அருள்ஜோதி | 289 |
| 101. | சங்க இலக்கியங்கள் உணர்த்தும் கற்புச்சிறப்பு - முனைவர் க.தனலட்சுமி | 292 |
| 102. | தொல்காப்பியம் காட்டும் சமுதாயம் - மு.ஜமுனா | 294 |
| 103. | பெண்ணியத் திறனாய்வு - முனைவர் அ.ஸ்ரீதேவி ராமலிங்கம் | 295 |
| 104. | பாரதக் கதையில் கர்ணன் - முனைவர் அ.பிரிசில்லா | 297 |
| 105. | பழந்தமிழ் இலக்கியத்தில் தலைமைப்பண்புகள் - ப.கணேஷ் வடிவேல் | 301 |
| 106. | பாலக்காடு மாவட்டத் தமிழின மக்களிடையே வழக்கிலிருக்கும் நம்பிக்கைகள் ஒரு பார்வை - முனைவர் செ.ஆறுச்சாமி | 304 |
| 107. | திருமணமும் கோள்களின் தாக்கமும் - ஓர் ஆய்வு - ம.வடிவேல், முனைவர் V.ஜெயபால் | 309 |
| 108. | திருமணமும் கோள்களின் தாக்கமும் - ஓர் ஆய்வு ம.வடிவேல், முனைவர் V.ஜெயபால் | 313 |
| 109. | வள்ளுவத்தில் விலங்கியல் சிந்தனைகள் - முனைவர் க.லதா | 319 |
| 110. | பாவண்ணன் படைப்பில் தொன்மச் சிந்தனைகள் - க.ரேவதி | 321 |
| 111. | புறப்பொருள் வெண்பாமாலையில் நாட்டுப்புறவியல் கூறுகள் - முனைவர் சி.சொர்ணமாலா | 323 |
| 112. | காளமேகம், கம்பர் பாடல்களில் உணவியல் - திருமதி ச.அ.சுஜா | 325 |
| 113. | தமிழிசைப்பாடல் பரிபாடலில் இசைக்கூறுகள் - முனைவர் நா.ரேணுகா | 327 |
| 114. | தொகை நூல்களுள் உணவியல் கூறுகள் - முனைவர் இரா.பொன்னி | 330 |
| 115. | படைப்புகள் உணர்த்தும் படிப்பினைகள் - முனைவர் இரா.ஏஞ்சல் | 332 |
| 116. | உயிர்க்குள் நாகத்தில் சமூகச் சிந்தனைகள் - ரா.கிருஷ்ணராஜ் | 336 |
| 117. | நோய் தீர்க்கும் நட்சத்திர மரங்கள் - சித்திரை நட்சத்திரம் - வில்வமரம் இரா. புருஷோத்தமன், முனைவர் கணேசன்.ஆ. | 340 |
| 118. | வெள்ளெருக்கும் திருவோண நட்சத்திரமும் புருஷோத்தமன்.இரா, முனைவர் கணேசன்.ஆ | 342 |
| 119. | கள்ளிக்காட்டு இதிகாசம் காட்டும் நாட்டுப்புறத் தொழில்சார் நுட்பங்கள் - முனைவர் பொ.சுதாராணி | 344 |
| 120. | தமிழில் கணிதம் - முனைவர் ப. கோமதி சுப்பிரமணியம் | 346 |
| 121. | சான்றோர்களின் படைப்பில் பெண்ணியம் - ச.தனலெட்சுமி | 348 |
| 122. | தீர்த்தங்களும் தெய்வ நம்பிக்கைகளும் மதுரைப்பகுதி ஓர் ஆய்வு - சி.மாணிக்கராஜ் | 352 |
| 123. | சிலப்பதிகார நிலவரைவியல் - முனைவர் த.கவிதா | 356 |
| 124. | மதுரைக்காஞ்சி பகரும் திருவிழாக்கள் - மு.துர்க்கா | 359 |
| 125. | கவிஞர் செ.கனிமொழியின் கவித்திறம் - முனைவர் க.லட்சுமி | 361 |
| 126. | பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் குழந்தை உளவியல் - க.மீனாட்சி, முனைவர் ப.தமிழரசி | 363 |
| 127. | தமிழர் பாதுகாப்பு அரண் - முனைவர் த. பாலமுருகன் | 367 |
| 128. | கவிஞர் கே. ரவியின் மின்னற்கவிதை - முனைவர் ச.கவிதா | 370 |
| 129. | வள்ளுவர் மற்றும் பிறநூலாசிரியர் போற்றும் நட்பு - சீ.மாலதி, முனைவர் ச.கவிதா | 373 |

தனிப்பாடல் திரட்டில் இலைக்கறி, கூழ் என்ற கீரைவகைகள், தேங்குழல், அப்பம், பணியாரம், முறுக்கு, வடை, பூந்தி, அவல், பட்டாணி, பொரி போன்ற உணவு வகைகள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன. காய்கறிக்கு வஞ்சினம் என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. வெங்காயம், சுக்கு, சீரகம், பெருங்காயம் உணவில் சேர்க்கப்பட்டதையும் 'பருப்பில்லாப் போசனம் பாழ்' என்ற மொழி மூலம் பருப்பின் முதன்மையையும் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

இன்றோ உணவு என்பது ஒரு நெறியாகப் போற்றப்படாமல் கருவியாகக் கருதப்படுவதால் உணவினை அவசரமாக, ஆரோக்கியமற்றவகையில் தயாரிக்கின்றனர். மாறிவிட்ட இன்றைய உணவுமுறைகள் நோய்களுக்குக் காரணமாகின்றன. இதிலிருந்து நம் உடலைக் காக்கவும், வேளாண்மையை மீட்கவும், பொருளியலைக் காக்கவும், இயற்கையை அழிவிலிருந்து தடுக்கவும் மீண்டும் நமது மரபு சார்ந்த உணவுமுறைக்கு மாறவேண்டும்.

ஒரு சமூகத்தைக் காக்கவும் அழிக்கவும் உணவால் முடியும் என்று சித்த உணவியல் துறை கூறுகிறது. காரணம் உணவு அடிப்படையில்தான் ஒரு மனிதன் உணர்வைப் பெறமுடியும். அந்த உணர்வுதான் சிந்தனையாக மாறும். அந்த சிந்தனைதான் செயல்பாடாக மாறும். அந்த செயல்கள் எல்லாம் சிறப்பானதாக இருந்து சமூகத்தை மேம்படுத்தும். இதுதான் உண்மை. எனவே சமூகத்தை உயர்த்த நல்லெண்ணங்கள் வேண்டும் நல்ல உணவுமுறைவேண்டும்.

வான்மழையை நம்பி விளையும் பயிர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, வீரிய வழிப நீர்ப்பாய்ச்சி விளைவிக்கப்படும் நெல்அரிசியையும், வடநாட்டின் கோதுமையையும் உணவுத்தட்டில் கொட்டி நம்மை அடிமையாக்கிவிட்டோம். வரகு, கம்பு, சோளம், சாமை, தினை போன்ற நம்நாட்டின் மரபுணவை நம் வாழ்க்கைக்கு மீண்டும் கொண்டு வருவோம். உடல் நலத்தோடு வாழுவோம் உறுதியான உடலையும், எண்ணத்தையும் கொண்ட சமூகத்தை உருவாக்குவோம்.

---

## 113.தமிழிசைப்பாடல் பரிபாடலில் இசைக்கூறுகள்

முனைவர் நா. ரேணுகா உதவிப்பேராசிரியர் தமிழ் உயராய்வு மையம் பாத்திமா கல்லூரி,மதுரை

இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைத் தான் பழந்தமிழன் வாழ்ந்தான். இவ்வாழ்க்கையைப் பழந்தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் காட்சிப்படுத்தின. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனத் தாம் வாழ்ந்த நிலப்பகுதியை ஐந்தாகப் பகுத்து, அதற்குரிய ஒழுக்கங்களாக முதல், உரி, கருப்பொருளை வகுத்தான். கருப்பொருளில், ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியான தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் என்பனவற்றை அமைத்துச் செம்மையான சமூகத்தைக் கட்டமைத்தான்.

**"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகை**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப"** தொல். அகத். 18

எனக் கருப்பொருள் குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. மேற்குறித்த ஐந்நிலப் பகுப்பிலே சங்க இலக்கியங்கள் உருவாயின. ஐந்திணைக்கும் தனித்தனியாக பண் அமைத்துப் பாடும் வழக்கத்தைக் காணமுடிகிறது. இது பிற்காலத்தில் காணப்படாத பாகுபாடாக விளங்குகிறது. சங்க இலக்கியங்களில் இசைக்குறிப்புகளும், இசைக்கருவிகள் குறித்த செய்திகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. பழந்தமிழர் சூழலில் மிகுதியும் பயன்படுத்தப்பட்டு, இன்று மறைந்து போன யாழ் பற்றிய குறிப்புகள் சங்கஇலக்கியங்களில் பரவிக் கிடைக்கின்றன. அதனுள்ளும் பண் வகுக்கப்பட்ட ஒரே சங்க இலக்கியமான பரிபாடலில் காணப்படும் இசைக்கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### பரிபாடல்

**"சங்க மென்னும் துங்கமலி கடலுள்**
**அரிதின் எழுந்த பரிபாட் டமுதம்"**

என்று தம் உரைச்சிறப்புப் பாயிரத்தால் சிறப்பிக்கப் பெற்ற சங்கநூல் பரிபாடல். சங்க இலக்கியத்திலே தனியொரு இசைப்பாடலாய் அமைந்த நூலும் பரிபாடலே.

**"நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே**
**கைக்கிளை பரிபாட்டங் கதச் செய்யுளோ**
**டெத்தலை எல்லாம் வெண்பா யாப்பின்"** (தொல். பொருள்.423)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. பரிபாடல் தனிப்பா வகையினதன்று. வெண்பா, ஆசிரியம், கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாடல்களின் உறுப்புகளும் கலந்துவரும் இசைப்பா வகையினது. பரிபாடல் தரவு, எருத்தம், அராகம், கொச்சகம், அடக்கியல்,வாரம் என்ற உறுப்புகளுடன் எண்ணும் கலந்து இயங்குகிறது. கலிப்பாவால் இயன்ற நூல் கலித்தொகை எனப்பெயர் பெற்றது போல பரிபாடல் என்னும் ஒருவகைப் பாவால் இயன்றது பரிபாடல். நால்வகைப் பாக்களால் இயன்று, பலவகை அடிகளைப் பெற்று வருவதால் 'பரிந்து வரும் பாட்டு' என வழங்கப்படுகிறது. எல்லாப் பாவிற்கும் அடி வகைகளுக்கும் பரிந்து இடங் கொடுப்பதாலும் பரிபாடல் என்றாயிற்று என்று தமிழறிஞர்கள் விளக்கம் தருகின்றனர். இந்நூல் உரையாசிரியர்